மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி மற்றும் சக்திவலு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு

மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

"தித்வா" அனர்த்த நிலைமையினால் மத்திய மாகாண சபையின் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கு மேலதிக பணியாளர்களைப் பெற்றுக்கொள்ளல்

''தித்வா" அனர்த்த நிலைமையினால் பாதிப்புக்குள்ளான மத்திய மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய வீதிகளை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரும் பொருட்டு பின்வரும் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) – 08 பதவிகள்

- மாதாந்த கொடுப்பனவு

  JM 1-1 சம்பள வகுதியின் IIஆம் தரத்தின் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயைபான வகையில்

  முகாமைத்துவ சேவை 01/2025.ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 65,633.00 ரூபா மற்றும் முகாமைத்துவ சேவை 01/2024ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் 17,800.00 ரூபா எனபவற்றுடன் 83,433.00 மாதாந்தக் கொடுப்பனவு உரித்தாகும்.

- தகைமைகள்: (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)

  1. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்றினில் (NVQ-7) 7ஆம் மட்டத்திற்குக் குறையாத பதவிக்குரித்தான விடயத்துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்
  2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்றினில் (NVQ-6) 6ஆம் மட்டத்திற்குக் குறையாத பதவிக்குரித்தான விடயத்துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

  அத்துடன்

  தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம், தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

  3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்றினில் (NVQ-5) 5ஆம் மட்டத்திற்குக் குறையாத பதவிக்குரித்தான விடயத்துறையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

  அத்துடன்

  தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம், தனியார் நிறுவனமொன்றில் குறித்த துறையில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

- **வயது:**

  22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

- வீதி நிர்மாணத் துறையில் உள்ள சேவை அனுபவத்திற்கு நேர்முகத் தேர்வின்போது முன்னுரிமை வழங்கப்படும்.

வேலை நிர்வாகி – 25 பதவிகள்

- மாதாந்த கொடுப்பனவு

  MA 1-1 சம்பள வகுதியின் IIIஆம் தரத்தின் ஆரம்பநிலை சம்பளத்திற்கு இயைபான வகையில்

  முகாமைத்துவ சேவை 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் IIஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் 43,312.00 ரூபா மற்றும் முகாமைத்துவ சேவை 01/2024ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் 17,800.00 ரூபா என்பவற்றுடன் 61,112.00 மாதாந்தக் கொடுப்பனவு உரித்தாகும்.

தகைமைகள்

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில்,

  i. சிங்களம் / தமிழ்

  ii. கணிதம்

  எனும் பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் சகல பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். பழைய பாடத் திட்டத்தின் கீழ் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்.

(இ) நிர்மாணம் தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்றினில் (NVQ) 4ஆம் மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்

- வயது:

  18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

- வீதி நிர்மாணத் துறையில் உள்ள சேவை அனுபவத்திற்கு நேர்முகத் தேர்வின்போது முன்னுரிமை வழங்கப்படும்.

பொது நிபந்தனைகள்:

1. இலங்கைப் பிரஜையாய் இருத்தல் வேண்டும்.
2. பதவிக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு மத்திய மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான உடல், உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
4. சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் நாள் அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.
5. அரச அல்லது நியாயாதிக்க சபையில் சேவையாற்றுபவர்களானால் நிறுவனத்தின் தலைமையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
6. விண்ணப்பதாரர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்ப் படிவத்தைத் தயாரித்து அனுப்ப வேண்டும் என்பதுடன் தாம் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
7. உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பதற்கு முன் தெரியவந்தால் தகுதியற்றவனாகக் கவனத்திற் கொள்ளப்பட்டு உங்களது அபேட்சகத்துவம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது பிழையான தகவலொன்று ஆட்சேர்க்கப்பட்டதன் பின் தெரியவந்தால் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சேவையிலிருந்து விலக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. குறித்த துறையில் உள்ள சேவை அனுபவத்திற்கு நேர்முகத் தேர்வின்போது முன்னுரிமை வழங்கப்படும்.

சேர்த்துக் கொள்ளப்படும் முறை

- மேற்கூறிய சகல பதவிகளுக்கும் கட்டமைக்கப்பட்ட தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும்.

  இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்தாரர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளனர் எனும் முழுமையான அபிப்பிராயத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தினம் அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரர்கள் இந்த பதவிக்கு நியமிப்பதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார்கள் என ஏற்றுக்கொண்டதாக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

  தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் சுய விபரங்களை உள்ளடக்கி தயாரித்துக் கொண்ட விண்ணப்ப் படிவத்தை குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுடன் (சான்றுபடுத்தப்பட்ட) விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு 2026-12-04ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

  நீங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதானால் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் பதவியை சகல விண்ணப்ப் படிவத்திலும் மற்றும் கடித உறையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

  2026-12-04ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் மற்றும் கடித உறையில் பதவியைக் குறிப்பிடாமல் அனுப்பப்படும், முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

  இந்த ஆட்சேர்ப்பு தொடர்பில் மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

பொது முகாமையாளர்,
மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை,
மத்திய மாகாணம்.

மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
இல. 09, எஹெலல்லேபொல குமாரிஹாமி மாவத்தை,
போகம்பர, கண்டி.
தொ.பே - 081-2204378